ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும்

டெடிகம தொகுதி முடிசூடா மன்னருமான

அமரர்

# டட்லி சேனநாயக்கா

அவர்கள் மீது



# அனுதாபக் கீதம்

(மூன்றாம் பதிப்பு)

ஆக்கியோன்

எஸ். ஆர். எஸ். பெரியாம்பிள்ளை கோனார்

நாவலப்பிட்டிய

பதிப்பாளர்:- வி. ராமசாமி — டிக்கோயா

14-6-73

### சாந்தி நிலை அடைந்தார்-என்ற மெட்டு

உம்பர் உலகடைந்தார் பொய்யான
உலகை விட்டு மறைந்தார் டட்லி [உ]

அம்புவி புகழும் இலங்கை மக்கட்கு
அன்னப்படி அளந்தோன் - ஏழைமக்கள்
உண்ண உணவும் தந்தோன் தேசம்
நம்பும் பார்லிமெண்டில் பிரதமர் பதவி
நான்கு முறை பெற்றவன் வருங்காலம்
நன்குணர்ந்த கொற்றவன் [உ]

(தொகையரு)

தேசபிதா டி. எஸ். சேனநாயக்கா அருமை
செல்வ மகன் டட்லி அவர்கள்
நேசமுடன் வந்திடும் குடிகளை அன்புடன்
நேசிப்பார் மகிழ அவர்கள்

(பாட்டு)

எண்டிசையும் புகழ் லண்டன் ஒக்ஸ்போர்ட்டில்
எம். ஏ. பட்டம் பெற்றவன் சிங்களம்
ஏராளமாய் கற்றவன் தம்மை
அண்டிவந்தோர்களை கண்டுளமகிழ்ந்து
கொண்டாடிடும் குணவான் யாதும் குறை
உண்டோ எனப் புகழ்வான் [உ]

முற்றும் துறந்த முனிவர்போல் இல்லற
பற்றற்று வாழ்ந்த தங்கம் சமரச
பாண்மை நிறைந்த அங்கம் கொண்ட
பக்திமான் டட்லி முத்தியடைந்தனர்
இத்தரை வாழ்வை விட்டு அருட்பெரும்
கர்த்தன் பாதம் கும்பிட்டு [உ]

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும், டெடிகம தொகுதி

முடிசூடா மன்னருமான அமரர்

# டட்லி சேனநாயக்கா

அவர்கள் மீது

# அனுதாபக் கீதம்.

மாரியம்மா முகம் பாரும்மா என்ற மெட்டு

1 சேனநாயக்கா டட்லி சேனநாயக்கா (சே)

2 வானவர் புகழும் வள்ளல் சேனநாயக்கா மக்கள்
வண்பசியைத் தீர்த்த செம்மல் சேனநாயக்கா
தானத்தில் மிகச்சிறந்த சேனநாயக்கா அன்ன
தானம் ஈழத்தோர்க்கு செய்த சேனநாயக்கா (சே)

3 மாண்புயரும் பார்லிமெண்டில் சேனநாயக்கா பிரதம
மந்திரியாயிருக்கும் போது சேனநாயக்கா
தான் கொடுத்தார் நாட்டவர்க்கு சேனநாயக்கா ரேசன்
தந்தார் இலவச அரிசி சேனநாயக்கா (சே)

4 புத்தியில் அஹிம்சை நெறிகொண்ட புண்ணியன் புத்தர்
புகன்ற அறவழியைக் கண்ட கண்ணியன்
சிந்தித்து செயல்புரிந்து சிறந்த நண்ணியன் கவிஞன்
சிந்தனைக் கெட்டாதகுணம் மிகுந்த கண்ணியன்

5 உழவருக்கு மன்னனென பட்டம் தந்திட்டோன் மக்கள்
ஊக்கமுடன்பாடுபட உணவு தந்திட்டோன்
தலைசிறந்த தர்மகுண பெயரடைந்திட்டோன் ஈழத்
தவபுதல்வன் உலகவாழ்வை தகர்த்தெறிந்திட்டோன் (சே)

6 நன்மை தீமை அறிந்து ஈழ நாட்டையும் காத்தார் மக்கள்
நலம் அறிந்து சேவை செய்து ஒற்றுமை சேர்த்தார்
உண்மையோடு இறக்கும் போதும் எழுந்து நிமிர்ந்தார் டட்லி
உலக வாழ்வை துறந்தே வானோர் உலகம் அடைந்தார் (சே)

7 ஜாதிமத பேதமில்லா சமரசஞானி உலக
சம்சார சாகரம் துறந்த சாதுமெஞ்ஞானி
மேதினி எல்லாம் புகழ்ந்த விபுணனின் மேனி தீயில்
வெந்துபிடி சாம்பலாக விரைந்து வானில் (சே)

## அறிவுக்கு விருந்தாகும் என்ற மெட்டு.

மகத்தான பணிசெய்த மதி மந்திரி உலகில்
இகத்தாசை தனைவென்ற இகத்தந்திரி டட்லி [ம]
மகத்தான சுகபோக வாழ்விருந்தும் தூய
மனத்தோடு அதை வெறுத்தோடி திருந்தும் படி
இனத்தோர்க்கு புகன்றிட தினம் அழைந்தும் அரைக்
கணமேனும் மறவாத் குணமிருந்தும் புவியில் [ம]

(தொகையரு)

நவகண்டம் புகழ்ந்திடும் இலங்கையில் கமத்தொழில்
நன்மக்கள் வாழ்வு சிறக்க
நன்மனதுடன் விவசாயம் செய்திட நிலம்
நமக்கு கொடுத்தார் விதைக்க

பாட்டு

இகபோக சுக வாழ்வும் நிலைநிற்காது என்றும்
இனபேதம் செய்தோர்க்கு தலைதூக்காது
அகமாய்கை வெறுத்தோர்க்கு புகழ் தப்பாது அறம்
அழியாது வளர்ந்தோங்கும் புகழ் குன்றுது டட்லி [ம]

## எட்டடி குச்சுக் - என்ற மெட்டு

தத்துவ விஞ்ஞானி - அரசியல்
தங்கும் அபிமானி
நத்தும் கலை கியானி - இலங்கை
நாட்டின் பிரதானி - புத்தியில் [தத்து]

(தொகையரு)

பாரினில் மேனாட்டு அறிஞர்களும் வியப்புற
பசிதீர்ந்து சுபீட்சமடைய
பலஇன மக்கள் வாழ் இலங்கையர் எல்லோருக்கும்
படியரிசி கொடுத்த நிபுணன்

பாட்டு

மன்னன் மடிந்தாலும் - கண்ணிரண்டும்
மானிலத்திலிருக்க
கண்ணையும் தானம் செய்த - கலியுகம்
கண்ட வள்ளல் எனலாம் [தத்து]
நாட்டிலும் வெள்ளைக்கொடி - வேடர்வாழும்
காட்டிலும் வெள்ளைக்கொடி
கேட்டிலும் வெள்ளைக்கொடி - தோட்ட மக்கள்
வீட்டிலும் வெள்ளைக்கொடி [தத்து]

கங்கையில் வெள்ளைக்கொடி - வரும்பெண்கள்
கரத்திலும் வெள்ளைக்கொடி
செங்கையில் வெள்ளைக்கொடி - தகன
சிதையிலும் வெள்ளைக்கொடி

வெள்ளைக் கொடி கட்டாமல் - இலங்கையில்
வீடுகள் ஒன்றுமில்லை
உள்ளத்தில் டட்லிக்கு - வருந்தாதோர்
ஒருத்தர் கூட இல்லை

நன்றி மறவாத - தாயும் ஒரு
நல்லுணவருந்தாமல்
கன்றிழந்த பசுப்போல் - எஜமானின்
கட்டிலண்டை நின்றது

பூரண கும்பம் வைத்து - சிவிகையில்
பூதவுடலை வைத்து
தாரணி மக்கள் வந்து - தரிசிக்க
தந்தார் உபசரித்து

நாட்டுக்கு நன்மைசெய்த - டட்லியின்
நாமம் புகழாத
தோட்டத் தொழிலாளர் - இல்லையெனத்
தோணுது நாட்டினிலே

மணப்பாறை மாடு கட்டி. என்ற மெட்டு

பொன்னிறத்தில் ரதம் அமைத்து பொற்சிதையில் உடலை வைத்து
மன்னன் டட்லி இறுதியாத்திரை நடக்குது நாட்டில்
மக்கள் கூட்டம் அழுது கண்ணீர் வடிக்குது
வெண்ணிற உடையணிந்து மெல்லியரும் ஆடவரும்
கண்ணீர் வடித்தே நின்று கலங்கினர் மலர்கள்
கரத்தால் அள்ளி இரதத்தில் சாற்றி வணங்கினர்
மாகானம் மந்திரிகள் மகிபன் சிவிகைதாங்கி வந்து
தாமாக நிருத்தி அஞ்சலி செலுத்தினர் மலர்கள்
தலைவன் சிவிகை மீது தூவி வணங்கினர்
இருபுறமும் மக்கள் நின்று இயன்ற மட்டும் மலரை அள்ளி
ஒருமனதுடன் பூமாரி பொழிந்திட்டார் ரதம்
ஊர்ந்து செல்லும் வீதி எங்கும் நிரைந்திட்டார்
சுதந்திர சதுக்கத்திற்கு சுகுணன் ரதம் வந்தடைந்ததும்

இதம் தரும் சாது சாது வெனும் வேதமே கூறி
இகத்தில் படித்தார்கள் சோக கீதமே

அறிஞர் பலர் கூடி நின்று அவர் நாட்டவர்க்கு செய்த
கடமைகளை அழகாய் எடுத் துரைத்தனர் சொன்ன
கருத்துக்களை கேட்டு மக்கள் திகைத்தனர்

சந்தனக் கட்டை அடுக்கி சவ்வாது சாம்பிராணி பன்னீர்
வந்துகொட்டி அதன் மேல் சிதைகை வைத்தனர் வேத
வாக்கியம் குருமார் நின்றுரைத்தனர்

தம்பி மகன் பெரியப்பாவின் தாள்பணிந்து கொள்ளிவைக்க
செந் தீ அணல் மிகுந்து எரியுது புகை
சென்று வானில் மேகத்தோடு மறையுது

# ஒப்பாரி

பார்புகழ்ந்திடும் இலங்கை பார்லிமெண்டு கட்டிடத்தில்
சீர்திகழும் பூதவுடல் தெரிசனைக்கு வைத்தார்கள்
கண்டு அஞ்சலி செலுத்தி காணவந்தோர் பத்துலட்சம்
கொண்டுவந்த பூவளையம் குவித்துவிட்டார் மாமலைபோல்
வண்டி லொரி பஸ்களிலும் வான் மோட்டார் கார்களிலும்
சென்டு பூவளையங்கள் சித்தரித்த பூச்சரங்கள்
மன்னன் தூங்கும் பொன்சிவிகை மறைந்தது பூஞ்சத்ரதால்
எண்ணில் அடங்காத மக்கள் ஏங்கி நின்றழுதார்கள்
வாரி அலைபோலே வந்த பெரும் கூட்டமெல்லாம்
நேரில் முகம் காண கியூவில் நின்றனர் ஏழுமைல்
வீரியமிகும் பானு விடும் வெப்பம் தாங்காமல்
நாரியர் சிலபேர்கள் நடுக்கமுற்று சாய்ந்தனர்கள்
அடிமேல் அடிவைத்து அசைந்து வரும் கூட்டத்திற்கு
குடிநீரும் சிற்றுண்டியும் கொடுத்தார் சில உத்தமர்கள்
கங்கும் பகலில் கியூவில் கால்கடுக்க நின்றவர்க்கு
பொங்கும் சோற்றுப்பார்சல் துதிபுகன்று கொடுத்தார் சிலபேர்
சாரணரும் செஞ்சிலுவை சங்கத்தர்மபக்தர்களும்
பூரண மனதுடனே புனிதத் தொண்டு செய்தார்கள்
எங்களுக்கு துணவு தந்த இகத்துறவியான அய்யா
உங்கள் மதிமுகத்தை உலகத்தில் காண்பதெப்போ
என்று புகன்று கியூவில் ஏழுமைலும் கடந்து
நின்று காலம் சென்றவர்க்கு நிகழ்த்தினர் வாழ்த்துரைகள்

## ஏர் முனைக்கு நேர் என்ற மெட்டு

டட்லி சேனநாயக்கா போல் தலைவனுமில்லை ஆ
டம்பர வாழ்க்கை வெறுத்தோர் தரணியிலில்லை

நான்கு முறை பிரதமராய் பதவி வகுத்தோன் ஈழ
நாட்டுக்கு உழைப்பதற்கு வாழ்வை வெறுத்தோன்
தாங்கும்காலம் சென்ற தந்தைக்குயர்வு கொடுந்தோன் கட்சி
தலைமைதாங்கி ஆட்சி முறை ஒழுங்காய் அமைத்தோன்

கட்டி கட்டியாக நிதி கொட்டி அளந்து அரிசி
கப்பல் கப்பலாக வரி கட்டிச் சுமந்து
தட்டில்லாமல் சகலருக்கும் சமமாய் பகிர்ந்து தந்த
தர்மபிரபு நம்மை விட்டுச் சென்றார் பிரிந்து

(தொகையரு)

டெடிகமத் தொகுதியின் முடிசூடா மன்னனென
ஜெய பேரிகை முழங்க
ஜெயம் பெற்று முப்பத்தேழ் ஆண்டுவரை தொடர்ச்சியாய்
சேர்ந்து அங்கத்துவம் வகித்தோன்
அடிமை கொளும் வெள்ளையர் அரசாங்க சபையிலும்
அதிகசிறுவயதிலிருந்து
அப்பனின் விவசாய மந்திரி பதவி ஏற்று
அழகாக கடமைபுரிந்தோன்
குடிஉரிமை நாட்டுரிமை மொழிஉரிமை சமஉரிமை
குடிமக்கள் வாக்குரிமையும்
குறையாது ஈழத்தில் நிறை வாழ்வு பெற்றிடும்
குறிதனை மனதில் கொண்டோன்
வடிவான இலங்கை வாழ் மக்கள் எல்லோரையும்
வாழ்ந்திட வழிவகுத்தோன்
வருந்தவிட்டனை வரையும் மறைந்திட்டார் செயல்மிக்க
மகிபாலன் டட்லி 'அவர்கள்

சத்திய நெறிதவரா பக்திமான் டட்லி சகல
ஜனங்களின் மனம் கவர்ந்த சமத்துவன் டட்லி
முத்திதரும் பௌத்தமத முகிலெனும் டட்லி மேதச
முடிமன்னர் களும்வியக்கும் வடிவனும் டட்லி [டட்]

அன்புடையீர்!

எமது கடையில் தாங்கள் விரும்பும் டிசைன்களில் நாரிமணிகளுக்கேற்ற

- நைலோன் சாரீகள்
- கமிசு பீடவைகள்
- ரவுக்கை துணிகள்
- ரெடிமேட் சேர்ட்டுகள்
- நாட்டுச் சேலைகள்
- பப்ளின் பிடவைகள்

மற்றும் வெற்றிலை, பாக்கு, பீடி, திறம் புகையிலை, யாழ்ப்பாண சுருட்டுக்களும் கிடைக்கும்.

**தங்கம் பொன் நகைகள் ஈடுபிடிக்கப்படும்.**

தங்கள் நல்வரவை விரும்பும்
சுப்பிரமணிய பிள்ளை

## தனலெச்சுமி ஸ்டோர்ஸ்,

மெயின் வீதி, கொட்டியாகொலை பஜார்.

---

எமது போடிங்கில் கைதேர்ந்த வேலை ஆட்களைக் கொண்டு சாப்பாடும், தேனீர், காப்பி, சிற்றுண்டி வகைகளும் சப்ளை செய்யப்படும்.

ஆடருக்கு குறிப்பிட்ட நேரத்தில் சப்ளை செய்யப்படும். மாதக்கணக்கில் சாப்பிடுவோருக்கும் மாணவருக்கும் விஷேசமாக கவனிக்கப்படும்.

மானேஜர்,
கருப்பையா

## ராகலை போடிங்,

**17, ராகலை பஜார் (சந்தைப் பக்கம்)**

அச்சுப்பதிவு:- ராஜா அச்சகம், நாவலப்பிட்டிய.